# த.வெ.க.வுக்கு ஓட்டுப் போட்டவர்கள் - இன்று வருத்தப்படுகிறார்கள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

**ஆனால், இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று, நீங்களே சோஷியல் மீடியாவில் நிறைய வீடியோக்களைப் பார்த்திருப்பீர்கள். நாள்தோறும் நடைபெறும் குற்றச் சம்பவங்கள், சென்னையையும் பல ஊர்களையும் இருட்டில் மூழ்கடிக்கிற மின்வெட்டு, விவசாயிகளின் பயிர்க் கடன் தள்ளுபடி என்று நடந்த நாடகம் என்று இப்படி பலதரப்பட்ட மக்களும், “ஏன்டா இந்த ஆட்சிக்கு வாக்களித்தோம்” என்று கோபமாக, ஆவேசமாக, வருந்திக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டுப் போட்டவர்களும் வருத்தப்படுகிறார்கள்; ஓட்டுப் போடாதவர்களும் வருத்தப்படுகிறார்கள். அதுதான் இப்போது இருக்கும் நிலை!**

சாதாரணமாகச் சொல்கிறார்கள்... “ஏதோ இரண்டு ஓட்டு போட்டோம். நீங்கள்தான் ஆட்சிக்கு வருவீர்கள் என்று நினைத்தோம். இப்படி ஆகிவிட்டதே!” என்று சொல்லி வருந்துகிறார்கள்.

### இன்று கொடூரமான குற்றச் சம்பவங்கள் நடக்கின்றன!

இப்போது இந்த ஆட்சியில் குற்றங்கள் பெருகி விட்டன. நியூஸ் சேனல்களை வைத்தாலே, கொடூரமான குற்றச்சம்பவங்கள்தான் செய்திகளாக வருகின்றன.

எனக்கு முன்பு பேசிய தங்கை கனிமொழி சொன்னார்கள், சமீபத்தில் திருவைகுண்டத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த பெண்ணுக்கு, அந்தக் கட்சியினரே பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி இரண்டு அமைச்சர்களிடம் முறையிட்டும் நீதி கிடைக்கவில்லை.

### பாலியல் குற்றங்களில் ஈடுபடும் த.வெ.க.வினர்!

நேற்றுகூட, ஆலந்தூரிலும், சேலத்திலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நபர்களே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாகச் செய்திகள் வந்தன.

**தேர்தலுக்கு முன்பு இன்றைக்கு இருக்கும் முதலமைச்சர் பேசிய அனைத்துக் கூட்டங்களிலும் பெண்கள் பாதுகாப்பு பற்றித்தான் தொடர்ந்து பேசினார். இன்னொன்றும் சொன்னார்; “எங்கு நல்ல விஷயம் நடந்தாலும் அது நம்ம பசங்கதான் செய்ததாக இருக்க வேண்டும்” என்று சொன்னார். ஆனால் இன்றைய நிலை என்ன? தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பெரும்பாலான குற்றச் செயல்களில் த.வெ.க. நிர்வாகிகள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பிரச்சாரத்தில் பேசும்போது, “த.வெ.க. ஆட்சி பாதுகாப்பு கொடுக்கும்” என்று சொன்னார்கள். ஆனால், இப்போது த.வெ.க.விடம் இருந்து பாதுகாப்பு வேண்டும் என்று மக்கள் கேட்கிற நிலைக்கு இன்றைக்குத் தமிழ்நாடு இருக்கிறது.**

### அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை ஷாப்பிங் செய்கிறார்! முதல்வர் விஜய்!

பொதுவாக எல்லோரும் ஷாப்பிங் போனால் என்ன வாங்குவார்கள்? டிரெஸ் வாங்குவார்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள். ஆனால், இப்போது நம்முடைய முதலமைச்சர் என்ன செய்கிறார் தெரியுமா? அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை ஷாப்பிங் செய்து கொண்டிருக்கிறார்.

நமக்கு என்ன சந்தேகம் என்றால், அவர் ஆட்சி மீது அவருக்கே நம்பிக்கை இல்லையா அல்லது அவருக்கு ஆதரவு கொடுத்திருக்கிற மற்ற கட்சிகள் மீது நம்பிக்கை இல்லையா? முதலில் அவர் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்களை த.வெ.க.வுக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தார். இப்போது, அவர்களை ராஜினாமா செய்ய வைத்து விட்டு, அடுத்தநொடியே தன்னுடைய கட்சியில் இணைத்திருக்கிறார்.



**மகளிர் அணியின் சார்பில், இந்த எழுச்சிமிகுந்த கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி செயலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

### பா.ஜ.க.வின் ‘ஜெராக்ஸ்’ மாதிரி செயல்படும், முதல்வர் விஜய்!

இந்த மாதிரி நியூஸ் எல்லாம் பார்க்கும் போது உங்களுக்கு என்ன ஞாபகம் வரும்? பா.ஜ.க. மற்ற மாநிலங்களில் செய்வதையே இங்கு முதலமைச்சர் விஜய் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார். அதாவது, பா.ஜ.க.வின் ஜெராக்ஸ் மாதிரி செயல்படுகிறார். உதவி என்று கேட்டபோது அவருக்கு ஆதரவு கொடுத்த கட்சிகளிடம் எல்லாம், இதைப் பற்றிக் கேட்கும்போது, தர்மசங்கடத்தில் தவிக்கிறார்கள்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு கட்சியில் பல பேருக்கு இடையில் ஒருவருக்குத்தான் வேட்பாளராக வாய்ப்புக் கிடைக்கிறது. எத்தனையோ தொண்டர்கள் உழைக்கிறார்கள், கூட்டணிக் கட்சிகளும் இவர்களது வெற்றிக்காக உழைக்கிறார்கள். இத்தனை பேரின் உழைப்பில் வெற்றி பெற்றுவிட்டு, வாக்குப்பதிவின் போது கைவிரலில் வைத்த மை அழிவதற்குள், ‘ரிசைன்’ செய்துவிட்டு இன்னொரு கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். ஜனநாயக சக்திகள் நியாயமாக இதைக் கேள்வி கேட்க வேண்டுமா, வேண்டாமா?

### ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கும் அசிங்கமான ஆட்சி!

ஒரே மாதத்தில் எம்.எல்.ஏ.-க்கள் ‘ரிசைன்’ செய்துவிட்டு த.வெ.க.வில் சேர்கிறார்களே, அந்த அளவுக்கு அப்படி என்ன ஆஃபர் த.வெ.க.வில் கிடைத்திருக்கும் என்று பேச வேண்டுமா? வேண்டாமா? ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குகிற அசிங்கமான ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது.

### “தீர்ந்துபோன சக்தியிடம் திருடும், காய்ந்து போன சக்தி”

**முதலமைச்சர்தான் மேடைக்கு மேடை “கான்ஃபிடண்ட்டா இருங்க” என்று சொல்கிறாரே தவிர, அவரே முதலில் கான்ஃபிடண்டாக இருக்கிறாரா! அதனால்தான், தீர்ந்துபோன சக்தி என்று சொன்னவர்களுடைய உறுப்பினர்களையே திருடிக் கொண்டிருக்கிறார். தீர்ந்துபோன சக்தியிடமே திருடுகிற இவர், எவ்வளவு காய்ந்து போன சக்தியாக இருப்பார் என்று பாருங்கள்.**

பாலியல் வன்முறைகள், அரிவாள் வெட்டு, பெட்ரோல் குண்டு வீச்சு என்று நடப்பதையெல்லாம் பார்த்தால், யாராலாவது விமர்சிக்காமல் இருக்க முடியுமா? வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு ‘டைம்’ தரலாம்; ஆனால், பொதுமக்களுடைய பாதுகாப்பு பற்றி எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?

நேற்று முன்தினம், டெல்லியில் பிரதமர் தலைமையில் முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொள்ளும் ‘நிதி ஆயோக்’ கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு இங்கிருக்கும் முதலமைச்சரும் போயிருக்கிறார். அங்கு சென்று என்ன பேசினார் என்று உங்களுக்குத் தெரியும். திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு உரிமைகளுக்காக நாம் வைத்த கோரிக்கைகளில் சிலவற்றையும், நமது ஆட்சியில் செய்த சாதனைகளில் சிலவற்றையும் தன்னுடைய உரையில் முதலமைச்சராக இருக்கும் விஜய் பேசியிருக்கிறார். அதை நாம் வரவேற்கிறோம். அதே சமயத்தில், நான் முதலமைச்சராக இருக்கும்போது, இதே மாதிரி டெல்லி சென்று பேசியபோது, இப்போது முதலமைச்சராக இருக்கிறவர் என்னவெல்லாம் பேசினார் என்று தெரியுமா? அவருக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

### முதல்வர் விஜய் மாதிரி, தரம் தாழ்ந்து விமர்சிக்க நான் விரும்பவில்லை!

“அமலாக்கத்துறை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகப் போனார்கள்”, “பா.ஜ.க. காலில் விழுந்து மறைமுகக் கூட்டணி வைத்திருக்கிறார்கள்”, “அதனால்தான் குரூப் ஃபோட்டோ எடுக்கும்போது முன் வரிசையில் நிற்க ஸ்டாலினுக்கு இடம் கொடுத்தார்கள்” என்று - இதெல்லாம் யார் சொன்னது? அவர் சொன்னது. இப்போது நீங்கள் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள், நான் கேட்கவா? **இப்போது நான் கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். Mr. Chief Minister, மாண்புமிகு முதலமைச்சர், கரூர் சி.பி.ஐ. வழக்கில் இருந்து தப்பிக்கத்தான் நீங்கள் டெல்லிக்குச் சென்றீர்களா?**

பா.ஜ.க.வை உறுதியாக விமர்சித்துப்பேசினால் உங்கள் ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா? இந்தக் கேள்வியையெல்லாம் கேட்டு, ஒரு முதலமைச்சராக நீங்கள் அரசுக் கூட்டத்தில் கலந்துகொண்டதை உங்களை மாதிரி நான் தரம் தாழ்ந்து விமர்சிக்க விரும்பவில்லை.

### சினிமா அல்ல இது! ஆட்சி நிர்வாகம்!

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த மறுத்த காரணத்திற்காகத் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு விடுவிக்காமல் ‘பிளாக்மெயில்’ செய்தார்கள். தி.மு.க. அரசு அதை எதிர்த்துப் போராடினோம். அதில் கூட இப்போது இருக்கும் முதலமைச்சர் என்ன சொன்னார்? பா.ஜ.க. அரசைத் கண்டிக்காமல், “கொடுப்பது அவர்கள் கடமை, வாங்குவது இவர்களது உரிமை. ஆனால் பாசிசமும் பாயாசமும் எல்.கே.ஜி. - யூ.கே.ஜி. பசங்க மாதிரி சண்டை போடுகிறார்கள்” என்று நக்கல் ‘நையாண்டி’ செய்தீர்களே... இப்போது நீங்கள் மட்டும் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள்? நிபந்தனைகள் இல்லாமல் நிதியைக் கொடுக்க வேண்டும் என்றுதானே நீங்களும் கேட்டிருக்கிறீர்கள்? இப்படித்தான் செய்ய முடியும்; ஏனெனில், இது சினிமா இல்லை, ஆட்சி நிர்வாகம். முதலில் அதை புரிந்து கொள்ளுங்கள்.

## திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை டெல்லியில் பிரதிபலித்த முதல்வர்!

### முதல்வரின் பேச்சு; தி.மு.க. அரசின் ‘பாலிசி நோட்!’

மாநில உரிமைகள் சார்ந்த எதுவாக இருந்தாலும் திராவிட மாடல் அரசு போட்டுத் தந்த ‘ப்ளூப்ரிண்ட்’ படிதான் யாராக இருந்தாலும் செயல்பட முடியும். சொல்லப்போனால், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் தமிழ்நாடு, பெண்கள் அதிகம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மாநிலம் தமிழ்நாடு, நமது மாணவர்களுக்கு ‘நீட்’ விலக்கு என, தி.மு.க. அரசின் பாலிசி நோட் மாதிரிதானே முதலமைச்சரின் ஒட்டுமொத்த பேச்சும் இருந்தது? ஈயடித்தான் காப்பியாக இருந்தால் நன்றாக இருக்காது என்று, 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்று நான் சொன்னதை மட்டும், 2036-க்குள் ஒன்றரை ட்ரில்லியன் டாலர் என்று, காரில் பட்டி பார்ப்பது போன்று, முதலமைச்சர் கொஞ்சமாக மாற்றிப் பேசிவிட்டு வந்திருக்கிறார். இருந்தாலும் அதற்காக என்னுடைய வாழ்த்துகள். Mr. Chief Minister அவர்களுக்கு. Oh, Sorry மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!

### இலட்சக்கணக்கான பெண்களை தி.மு.க.வை நோக்கி ஈர்த்து வாருங்கள்!

இப்போது நான் கேட்ட கேள்விகளையெல்லாம் இங்கு வந்திருக்கிற மகளிரணி உடன்பிறப்புகள் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். நம்மை நம்பி ஒரு கோடியே 55 லட்சம் பேர் வாக்களித்திருக்கிறார்கள்; அவர்களுடைய நம்பிக்கையையும் காப்பாற்ற வேண்டும். எனவே, விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டும் போதாது; லட்சக்கணக்கான இளம் பெண்களைத் தி.மு.க.வை நோக்கி ஈர்த்து வர வேண்டும். அதுமாதிரி நமது செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

நம்மிடம் வரலாறு இருக்கிறது, கொள்கை இருக்கிறது, சாதனைகள் இருக்கிறது, எதிர்காலத்திற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வை இருக்கிறது. இது எல்லாவற்றையும் மக்களுக்குப் புரிகிற மாதிரி சொல்லுங்கள். புரிந்து கொள்ள ஆரம்பித்தால், அவர்கள் நிச்சயம் தி.மு.க.வை நோக்கித்தான் வருவார்கள். அதற்கான பொறுப்பும் கடமையும் மகளிரணியினரான உங்களிடம்தான் இருக்கிறது.

நம்முடைய இயக்கம், அறிவியக்கம் என்பதைக் காட்டுங்கள். எல்லோரையும் நம்முடைய இயக்கத்தை நோக்கி அழைத்து வாருங்கள். **தலைவர் கலைஞர் தான் அடிக்கடி சொல்வார்: “கட்சி என்பது தலை! ஆட்சி என்பது கிரீடம்! தலை இருந்தால் கிரீடத்தை எப்போது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் கிரீடத்தை மட்டும் வைத்துக் கொண்டு, தலையைத் தேட முடியாது**” என்று சொல்வார். இப்போது, நாம் தலையைப் பலப்படுத்துகிற பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். நம்முடைய பலம், நம்முடைய கட்சியின் அமைப்பு முறை. அதனால் தான், “இந்தக் கருணாநிதியின் வாழ்க்கையே முடிந்தாலும் தி.மு.க.வின் வாழ்க்கை முடியாது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

### என்றைக்கும் நான் உங்களின் உடன் பிறப்பு!

தி.மு.க.வின் பயணம் தொடர உங்களுடைய உழைப்பைக் கொடுங்கள், கொடுங்கள், கொடுங்கள் என்று கூறி, நான் எப்போதும் உங்களுக்கு அண்ணனாக, தம்பியாக, சகோதரனாக, ஒட்டுமொத்தமாக உங்களின் உடன்பிறப்பாக இருப்பேன் என்ற உறுதியைச் சொல்லி, உங்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

---

### மோடி மற்றும் விஜய்யின் நடவடிக்கையின்மையால்

# தமிழ்நாட்டில் வேளாண்மை தொழில் கடுமையான பாதிப்பு!


## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, ஜூன் 14-*

*பிரதமர் மோடி மற்றும் ஜோசப் விஜய் அரசுகளின் விவசாயிகளை வஞ்சிக்கும் செயலால் தமிழகத்தில் வேளாண்மை தொழிலின் எதிர்காலம் கடுமையாக பாதிக்கப்படும் என தினகன் தலையங்கத்தில் வருத்தம் தெரிவித்துள்ளது.*

*அது வருமாறு :-*

*உழவன் செழித்தால் உலகம் செழிக்கும்’ என்பார்கள். விவசாயமே நாட்டின் முதுகெலும்பு. நம் பசி போக்க வெயிலிலும், மழையி லும் பாடுபடும் விவசாயிகள் நிலைமை சொல்லி மாளாது. கடும் போராட்டத்திற்கு இடையிலும் விவ சாயிகள் வேளாண்மை தொழிலை உயிராக மதித்து களம் காண்கின்றனர். விவசாயத்தின் மதிப்பை உணர்ந்தே கடந்த தி.மு.க. அரசு வேளாண் அரசுக்கு தனி பட்ஜெட் ஒதுக்கியது. அவர்களுக்கான உரிய சலுகைகளையும் செய்து வந்தது.*



தினகரன்

ஜூன் 13, 2026 சனிக்கிழமை

விவசாயிகளை வஞ்சிப்பதா?

*புதியதாக தவெக அரசு பொறுப்பேற்றதும் விவசாயிகளுக்கு முதல் இடியை பயிர்க்கடன் என்ற பெயரில் இறக்கியது. குறு விவசாயிகளுக்கு ரூ.50 ஆயிரம், சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரை பயிர்க்கடன் தள்ளுபடி என அறிவித்தது. முன்னதாக தவெக சார்பில் வெளியான தேர்தல் வாக்குறுதியில், அனைத்து வகையான விவசாயிகளுக்கும் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி என கூறியிருந்தது. ஆனால், வெறும் ரூ.2,044 கோடிக்கு மட்டுமே பயிர்க்கடனை தள்ளுபடி செய்தது, தமிழகமெங்கும் விவசாயிகளை கொந்தளிக்க செய்தது. இதனைக் கண்டித்து தமிழகமெங்கும் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், வேறு எந்த மாநிலத்திலோ நடப்பது போல, வழக்கம் போல விவ சாயிகள் விஷயத்திலும் முதல்வர் விஜய் மவுனம் சாதித்து வருகிறார்.*

*மேலும், ஒன்றிய அரசு நிறுவனம் தமிழக விவசாயிகளிடம் ரூ.500 கோடிக்கு மேல் நெல் கொள்முதல் செய்திருந்தது. இதனை கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக வழங்காததால், விவசாயிகள் தமிழகம் முழுவதும் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ள னர். இதுவரை தமிழக அரசு தரப்பில் இருந்து, இந்த பிரச்சினை தொடர்பாக உரிய பேச்சுவார்த்தை மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இருமுறை பிரதமர் மோடியை முதல்வர் விஜய் சந்தித்தும், இது தொடர்பாக வலியுறுத்தவில்லை என்பதுதான் வேதனை.*

*மறுபுறம் தமிழகத்தில் பாசனத்திற்கு தேவை யான தண்ணீர் முறைப்படி திறக்காததாலும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாததாலும் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். குறிப்பாக, மேட்டூர் பாசனம் மூலம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்பட 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள 16.05 லட்சம் ஏக் கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆண்டு தோறும் ஜூன் 12 முதல் ஜனவரி 28ம் தேதி வரை டெல்டா பாசனத்திற்கு, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். அந்த வகையில் நேற்று டெல்டா மாவட்ட குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், நீர்மட்டம் 79.56 அடியா கவும், நீர் இருப்பு 41.52 டிஎம்சியாகவும் உள்ளதாக கூறி, மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் காவிரி டெல்டா விவசாயி கள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான விவசாய தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும், குடிநீர் தட்டுப்பாடு அபாயமும் ஏற்பட்டுள்ளது.*

*மேலும், வைகை, பெரியாறு அணைகளின் நீர்மட்டமும் கவலைக்குரிய நிலையில் உள்ளதால், வழக்கமாக ஜூன் முதல் 2 வாரங்களில் முறை வைத்து தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், நீர் இருப்பு குறைவால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதுதொடர்பாக முறையாக ஆய்வு நடத்தி, நிலைமை சமாளிப்பதற்கான வழிமுறைகளை த.வெ.க. அரசு ஈடுபடவில்லை. இதனால் மதுரை உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஒருபுறம் இயற்கை, மறுபுறம் ஒன்றிய. மாநில அரசுகளின் விவசாயிகளை வஞ்சிக்கும் செயலால் தமிழகத்தில் வேளாண்மை தொழிலின் எதிர்காலம் கடுமையாக பாதிக்கப்படும் குழலுக்கு தள்ளப்பட்டிருப்பது கவலைக்குரிய விஷயமாகும்.*

*இவ்வாறு தினகரன் நாளேடு விவசாயிகளின் நிலைமை குறித்தும் முதல்வர் விஜய்யின் நடவடிக்கை குறித்தும் வருத்தம் தெரிவித்துள்ளது.*